JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **95/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 7** | Prosecution /Defence / Court | |
| Name | விவேகானந்தன் **(ADSP)** | Village | |
| Father's Name | மாணிக்கம் | Taluk | ஈரோடு |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 18.11.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் தற்போது ஈரோடு மாவட்டம், தலைமையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக 25.05.2012 ம் தேதி பணியில் இருந்த போது கடந்த 15.09.2011 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த குற்ற எண். 656/2014 சட்டப்பிரிவு 392 இதச வழக்கில் மேல் புலன் விசாரணை மேற்கொண்டேன். இந்த வழக்கில் எனக்கு முன்பிருந்த காவல் ஆய்வாளர் குணசேகரன் புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து பின்பு வழக்கின் 1 வது எதிரி புருசோத்தமன் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி இருந்தார். பிறகு வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று காவல் ஆய்வாளர் ஏற்கனேவே தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை ஒப்பீடு செய்து பார்த்தேன். சரியாக இருந்தது. அதனால் நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை.

2. பிறகு வழக்கின் சாட்சிகள் சரசாள் என்கிற சரஸ்வதி, கோவிந்தன், சுப்பரமணி, செல்வகுமார், பெருமாள் ஆகியோர்களை விசாரித்ததில் முந்தைய காவல் ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பிறகு இந்த வழக்கின் 1 ம் எதிரி புருசோத்தமனுக்கு உதவியாக இருந்த மற்றொரு எதிரி மாதவன் என்கிற கண்ணன் என்பவர் தலைமறைவாக இருந்ததால் அவரை தேடி கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. தலைமறைவு எதிரி மாதவன் என்கிற கண்ணன் என்பவரை மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு சென்று விசாரணை மேற்கொண்டதில் அவரை பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை. அதனால் அவரை கைது செய்ய இயலவில்லை.

3. பிறகு வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2 பவுன் தங்க சங்கிலி, ஆகியவற்றை ஆராயும் போது வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி புருசோத்தமன் சாட்சி சரசாள் என்கிற சரஸ்வதி என்பவர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 2 பவுன் தங்க சங்கிலியை பிடுங்கி கொள்ளை அடித்து சென்றுள்ளதும், அதற்கு உடந்தையாக மற்றொரு எதிரி மாதவன் என்கிற கண்ணன் மோட்டார் சைக்கிளை சம்பவத்திற்கு ஓட்டி வந்தது எனத் தெரியவந்ததால் எதிரி புருசோத்தமன், மாதவன் என்ற கண்ணன் ஆகியோர்கள் மீது இதச பிரிவு 392 மற்றும் 392 r/w 34 பிரிவின் கீழ் 09.06.2012 ம் தேதியன்று குற்ற அறிக்கை தயார் செய்து பின்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** மறுப்புலன் விசாரணை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரணை செய்தேன் என்றால் 25.05.2012 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்குமேல் மறுப்புலன் விசாரணை செய்தேன். எங்கு வைத்து மறுபுலன் விசாரணை செய்தேன் என்றால் பணிக்கம்பாளையம் மற்றும் பெருந்துறை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில் நானும் மற்றொரு எதிரியும் TN 28 AP 1296 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் வந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 28 AP 1296 என்ற வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எனக்குத் தெரியாது என்றால் அதன் விவரம் அறியப்படவில்லை வாகனத்தின் கலர் மற்றும் மாடல் என்ன என்றால் அதன் விவரம் அறியப்படவில்லை.

2. என்னுடைய மறுப்புலன் விசாரணையில் மேற்படி வாகனம் எங்கிருந்து திருடப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் நாமக்கலில் திருடப்பட்ட வாகனம் என்று ஒப்புதல் வாக்குமூலம் மூலம் தெரிந்து கொண்டேன். மறுப்புலன் விசாரணையின் மூலம் வாகனம் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மறுப்புலன் விசாரணையிலும் கலர் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். நான் சரிவர மறுப்புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் மற்றொரு தலை மறைவு குற்றவாளியான மாதவன் என்கிற கண்ணனை 14 ஆண்டுகள் ஆகியும் இதனால் வரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் இந்த வழக்கில் கைது செய்யப்படவில்லை.

3. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள மற்றொரு எதிரியான மாதவன் என்கிற கண்ணன் என்கிற அப்படி ஒரு நபரை இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக ஜோடிக்கப்பட்டதால் தான் அப்படி ஒரு நபரை நான் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் தவறாக ஒரு நபரின் பெயரை குறிப்பிட்டதற்கு வாய்ப்புள்ளது. மறுப்புலன் விசாரணையில் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி உண்மையை சொன்னாரா? பொய்யை சொன்னாரா என்று நான் கண்டறியவில்லை என்றால் சரியல்ல. புகாரிலும் குற்ற இறுதி அறிக்கையிலும் 2 பவுன் தங்க நகையின் மாடல் மற்றும் வடிவம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 யை மறுப்புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அப்போது நகையைப் பற்றி அதன் வடிவத்தையும் மாடல் பற்றியும் விசாரிக்கவில்லை என்றால் சாதாரண செயின் என்று மட்டும் சொன்னார்கள்.

4. நான் மறுப்புலன் விசாரணையில் அ.சா.6 ஏற்கனவே புலன் விசாரணை செய்த அதிகாரியை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் . வழக்கு கோப்பில் வழக்கு விபரங்களை குறிப்பிட்டு இருப்பதாக சொன்னார். பெருந்துறை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். எந்த தேதியில் அ.சா.6 யை விசாரித்தேன் என்றால்

25.05.2012 ம் தேதி அன்று விசாரித்தேன். நேரம் தற்சமயம் நினைவில் இல்லை. அவருடைய வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அ.சா.6 வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. ரவி அவர்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். பெருந்துறை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 25.05.2012 ம் தேதி அன்று விசாரித்தேன். வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

5. அ.சா.6 சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. TN 28 AP 1296 என்பது இருசக்கர வாகனமே அல்ல அது ஒரு அசோக் லைலாண்ட் வாகனம் என்றால் அந்த வாகனம் பற்றி எதிரிக்கு தான் தெரியும். அதைப்பற்றி மறுப்புலன் விசாரணையில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. TN 28 AP 1296 வாகனம் கைப்பற்றப்பட்டதா என்றால் அந்த வாகனத்தை நான் கைப்பற்றவில்லை. அ.சா.6 யை புலன் விசாரணை செய்த போது எங்கு வைத்து அந்த வாகனம் கைப்பற்றப்பட்டது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரியல்ல.

6. முதல் தகவல் அறிக்கையில் காலம் 12 ல் 17 ஆம் வரியில் பைக்கில் இறங்கி வந்து செயினை பறித்த நபர் இங்கு நாங்கள் பேசும் தமிழ் மொழியை விட வித்தியாசமான தமிழ் மொழியில் பேசினார் என்றும் வலது காதில் கடுக்கன் போட்டு வந்தார் என்றும் கருப்பு நிறமாக இருந்தால் வெளியில் பைக்கில் உட்கார்ந்தபடி இருந்தவர் சரியான அடையாளம் தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரிலும் மேற்படி விபரங்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் தமிழ் மொழியில் தான் குறுக்கு விசாரணை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சரிவர மறுப்புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், இந்த வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்குக்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை